# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No..76/2017 தேதி- 27.04.2026

(C.W.2) . சத்தியதாஸ்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.7 ஆவணம் எங்கள் அலுவலகத்தால் வழங்கிய ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் யாருடைய பெயருக்கு வழங்கப்பட்டது என்றால் வாதியின் பெயரில் வழக்கப்பட்டது. மேற்படி ஆவணம் எந்த சர்வே எண், எந்த கிராமம் எவ்வளவு என்றால் மிடாலம் கிராமம் சர்வே எண். 663/7 எ 1 எ, ஏரியா 8.8918 செண்ட் ஆகும். நாங்கள் வரைபட அனுமதி வழங்கும் போது இடத்தை ஆவணங்களின் படி இருப்பதை அறிந்த பின்பு நேரில் பார்வையிட்டு பின்பு தான் அனுமதி வழங்குவோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் பாதைக்காக எவ்வளவு ஏரியா காண்பிக்கப்பட்டது என்றால் 3.30 மீட்டர் காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி என்று வழங்கப்பட்டது என்றால் 10.06.1998 அன்று வழங்கப்பட்டது. மேற்படி இடத்திற்கு வரி விதிக்கப்பட வேண்டும் என்றால் அனுமதியின் படி கட்டிடம் இருக்கிறதா என்பதை பார்த்துதான் வரி விதிக்கப்படும் என்றால் சரிதான். வாதி கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பம் தாக்கல் செய்யும் போது ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார் ஆவண எண் என்ன என்றால் 610/1998 (வா.சா.ஆ.1 ) வா.சா.ஆ.1 ஆவணத்துடன் கர ரசீது பட்டா ஆகியவற்றை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

வரி வசூல் அறிக்கை மேற்படி சொத்தில் தொடர்புடையது என்றால் சரிதான். மேற்படி வரி வசூல் அறிக்கை **நீ.ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அனுமதி வழங்கப்பட்டதன் படி கட்டிடம் உள்ளது மற்றும் பாதை அவகாசம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தை தொட்டு மேற்கு பக்கம் தான் நான் சமர்பித்துள்ள நீ.ம.சா.ஆ.5, 6 ஆவணத்தில் உள்ள வரைபட கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்திற்கம் நீ.ம.சா.5 ஆவணத்திற்கும் ஒரே பாதை என்றால் சரிதான்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வா.சா.ஆ.7 ஆவணத்தை யார் எங்களுடைய அலுவலகத்தில் தாக்கல் செய்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டுக் கூற முடியுமா என்றால் வாதி தாக்கல் செய்தார். வா.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வழிப்பாதை, வாதிக்கு முழுமையாக உரிமை பட்டது இல்லை என்றால் 8.918 சென்ட் புரையிடம் என்றும் 1.082 புரையிடம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது வழிப்பாதை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. பி பட்டிகை சொத்து வாதி சொத்தின் மேற்கு பக்கம் உள்ள சொத்திற்கு சென்று சேரும் என்று குறிப்பிடவில்லை என்றால் ஆவணத்தில் இல்லை வாதி மற்றும் பிரதிவாதியின் வரைபடத்தில் வழிப்பாதை காண்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஆவணத்தில் வாதியின் சொத்தின் தென்மேற்கு மூலையில் proposed building இருப்பதால் அதை தாண்டி மேற்கு பக்கம் இருக்கும் சொத்திற்கு வழிப்பாதை இல்லை என்றால் சரிதான் வாதியின் வீட்டைத் தாண்டி மேற்கு பக்கம் வழிப்பாதை இல்லை.

வேறு ஒருரின் பட்டா சொத்தில் பஞ்சாயத்தால் வழிப்பாதை ஏற்படுத்திக்கொடுக்க முடியாது என்றால் சரிதான். ஒரு கட்டிடத்திற்கு வழிப்பாதை இல்லை என்றால் அதன் உரிமையாளர் தான் வழிப்பாதையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றால் சரிதான்.